/மிகவும் அவசரம்/ /தனிக்கவனம்/

தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை –600 006.
ந.க.எண். 16900/டி1/2014 நாள்.18.6.2014.

பொருள். தொடக்கக் கல்வி – ஆசிரியர் பொது மாறுதல் – மாவட்டம் விட்டு மாறுதல் – இணையதளவழி (Online) மூலமாக கலந்தாய்வு நடைபெறுதல் – அறிவுரைகள் வழங்குதல் – சார்பு.

பார்வை.
1. அரசாணை (1டி) எண். 137 , பள்ளிக் கல்வித் (ப.க5(1)) துறை நாள். 9.6.2014.
2. அரசுக் கடிதம் எண். 15468/ப.க.5(1)/2014–3, நாள். 9.6.2014.
3. தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.16900/டி1/2014 நாள். 17.6.2014.

----------

மேற்காண் பொருளின் மீது அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களின் கவனம் உடனடியாக ஈர்க்கப்படுகிறது.

2014–2015ம் கல்வியாண்டிற்கான பொது மாறுதல் கலந்தாய்வு குறித்த பார்வை 1ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 2ல் காணும் அரசுக் கடிதத்தில் அனுமதிக்கப்பட்ட கால அட்டவணை ஏற்கனவே அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டு கலந்தாய்வு தொடங்கப்பட்டுள்ள நிலையில், கால அட்டவணையில் மாற்றம் செய்து இடைநிலை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர் மாவட்ட மாறுதல் கலந்தாய்வினை மட்டும் பள்ளிக் கல்வி இயக்ககத்துடன் இணைந்து இணைய தள வழியில் (Online) பார்வை 3ல் காணும் தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி கலந்தாய்வு நடைபெறவுள்ளது.

மேலும், 20.6.2014 அன்று நடைபெறவுள்ள கூட்டத்தில், மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் சார்பான இணையதள வழி (Online) கலந்தாய்வு அறிவுரைகள் வழங்கப்படவுள்ளதால், மாவட்ட மாறுதலுக்காக விண்ணப்பித்துள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் அனைத்தையும் சார்ந்த மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் தங்களுடன் கொண்டுவரவேண்டும்.

17.6.2014 அன்று தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கு வருகை புரிந்த கணினி இயக்குபவர், மடிக்கணினியுடன் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலருடன் இக்கூட்டத்திற்கு வருகைபுரிய வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒப்பம்/–
தொடக்கக் கல்வி இயக்குநர்